


# இயேசுவைப்பற்றி அதிக சாட்சிகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** யோவான் 3:25–36; 1:32– 36; தானி 7:18; யோவான் 6:51–71; 5:36–38; 7:37–53.

**மனன வசனம்:** நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். யோவான் 12:32.

தம்மையும், தாம் யாரென்பதையும், தம்மை அனுப்பினவர் யாரென்பதையும் அல்லது தாம் எங்கிருந்து வந்தாரென்பதையும்பற்றி இயேசு சில ஆச்சரியமான விஷயங்களைச் சொன்னார். அதுமட்டுமல்ல, தாம் செய்த அற்புதங்கள் - அடையாளங்கள்மூலம் தாம் யாரென்பதைக் காண்பித்தார். சிலர் இயேசுவைப்பற்றி இவ்வாறு சாட்சியிடுகிறார்கள்: ‘கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப்பார்க்கிலும் அதிகம் செய்வாரோ?’ யோவான் 7:31.

தாம் சொன்ன வார்த்தைகள் உண்மை என்பதை, தமது செயல்கள்மூலம் நிரூபித்தார்.

இந்நிலையில், மக்கள் மத்தியில் கருத்துபேதம் ஏற்படுகிறது. பெதஸ்தா குளத்தருகே இருந்த வியாதியஸ்தனை அவர் குணப்படுத்தியதால் சில தலைவர்கள் கோபமடைந்தார்கள். கப்பர்நகூமில் 5000 பேரை போஷித்தபிறகு உண்டான விவாதத்தின் நிமித்தம் ஏராளமானோர் அவரைப் புறக்கணித்தார்கள். லாசரு உயிர்த்தெழுந்த சம்பவத்தால் சிலர் விசுவாசித்தார்கள்; ஆனால் வேறு சிலர் பகைத்தார்கள்; அதுதான் அவரை விசாரிக்கவும் கொல்லவும் வழிவகுத்தது.

இயேசுவைக் கண்டு, சாட்சியிட்ட சிலரைப்பற்றி இந்த வாரப் பாடத்தில் பார்ப்போம். அந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றிலும், இயேசு யாரென்பதுகுறித்த சில அம்சங்கள் வெளிப்படுகின்றன; அவற்றை ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, மேசியாவாகிய இயேசுகுறித்த ஆழமான ஒரு காட்சி கிடைக்கிறது.

*2024 நவம்பர் 9 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ஆத்தும எளிமை: யோவான் ஸ்நானன் சாட்சி

யோவான் ஸ்நானனின் சாட்சியால் முதல் சீடர்களாகிய அந்திரேயா, யோவான், பேதுரு, பிலிப்பு, நாத்தான்வேல் போன்றோர் இயேசுவிடம் வந்தது பற்றி 2ஆம் பாடத்தில் பார்த்தோம். அந்தச் சாட்சியோடு யோவானின் வேலை முடிந்ததாக நாம் கருதலாம். ஆனால் யோவான் சுவிசேஷத்தில் அவரைப்பற்றி அடிக்கடி பார்க்கிறோம்.

**யோவான் ஸ்நானன் தன்னை இயேசுவோடு எவ்வாறு ஒப்பிடுகிறார்? யோவான் 3:25-36.**

யோவான் ஸ்நானனுடைய சீடர்களுக்கும், பெயர்சொல்லப்படாத ஒரு யூதனுக்கும் ஒரு வாக்குவாதம் எழும்புகிறது; ஞானஸ்நானத்தின் பயன்பற்றி கேள்வி எழுந்திருக்கலாம். மாற்கு 1:4,5. அந்தக் கேள்விக்குப் பதில்கேட்டு யோவானிடம் வருகிற அவரது சீடர்கள், இயேசுவைப்பற்றிப் பேசுகிறார்கள். 'அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள்' என்கிறார்கள். யோவான் 3:26. அவர்கள் சொல்வதைப் புரிந்துகொள்வது கடினமாக இல்லை; இயேசுவின்மீது பொறாமை கொண்டார்கள்; தங்களையும் தங்கள் குருவையும்விட அவர் பெரியவராகத் தெரிவதை விரும்ப வில்லை.

யோவானும் கூடச்சேர்ந்து பொறாமைப்பட்டிருக்கலாம்; ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை; தன் ஊழியம் என்னவென்பதைப் புரிந்திருந்தார். அவர் தன்னை ஒருபோதும் கிறிஸ்துவென அழைத்துக்கொள்ளவில்லை என்று தன் சீடர்களுக்கு ஞாபகப்படுத்தினார். அவரோ இயேசுவைச்சுட்டிக்காட்டவும், அவருக்காக வழியை ஆயத்தம்பண்ணவும், அவரைப்பற்றின சாட்சியாக இருக்கவும் வந்திருந்தார். யோவான் 1:6-8.

கலியாணத்தை ஓர் உருவகமாக வைத்து, இயேசுவை மணவாளன் என்றும், தன்னை மணவாளனுடைய நண்பன் என்றும் சொல்லுகிறார். தேவனுடைய மக்களே மணவாட்டி. ஒப்பிடவும்: ஓசியா 2:16-23; ஏசாயா 62:1-5. பிறகு, மெய்யான மேன்மை காணப்படுகிற சில வார்த்தைகளைப் பேசுகிறார்: 'அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்.' யோவான் 3:30.

இயேசுவையும் யோவானையும் யோவான் 3:31-36 ஒப்பிட்டுப் பேசுகின்றது; மேசியாவின் முன்னோடியைவிட மேசியா மேலானவரென்பதைக் காட்டுகின்றது. இயேசுவைப்பற்றி யோவான் சாட்சியிடுகிறார்; சாட்சிப்பகிர்வதின் முக்கியத்துவத்தை அதில் காணமுடிகிறது. அந்தச் சாட்சியை ஏற்றுக்கொண்டு, இயேசுவை விசுவாசிக்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள். அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள், தேவனுடைய கோபத்திற்கு ஆளாவார்கள். அப்படித்தான் வசனம் சொல்லுகிறது. தேவன் உலகத்தை நேசிக்கிறார்; உலகத்தை மீட்பதற்காக தம் குமாரனை அனுப்பினார். யோவான் 3:16,17. ஆனால் தங்களுக்கு அருளப்பட்ட ஈவை மறுக்கிறவர்கள், தங்கள் பாவங்களுக்கான தண்டனையை அனுபவிக்கவேண்டும்; அது நித்திய மரணம்.

---

**தேவனுக்கும் மனிதர்களுக்கும் முன்பாகத் தாழ்மையாக இருக்கவேண்டும் என்கிற படிப்பினையை எவ்வாறு கற்றுக்கொள்ள முடிகிறது? ஆவியில் எளிமையாக இருப்பதுபற்றி யோவானின் உதாரணத்திலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?**

# மேசியாகுறித்த புதிய புரிதல்

**நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியாவைப்பற்றி மக்கள் எதிர்பார்க்காத என்ன கருத்தை யோவான் இங்கே கூறுகிறார்? யோவான் 1:32-36.**

ரோமரின் ஆட்சியிலிருந்து தங்களை விடுவிக்க வரப்போகிற ஒரு மேசியாவை யூதர்கள் எதிர்பார்த்தார்கள். நீண்டகாலம் ஒடுக்குதலின்கீழ் இருந்ததால், மேசியா வந்து, ரோமர்களைத் தோற்கடித்து, தங்களை மிகப்பெரிய ஒரு தேசமாக நிலைநாட்டுவாரென எதிர்பார்த்தார்கள். பாவநிவாரண பலியாக இயேசு சாக இருந்ததை நேரடியாகச் சுட்டிக்காட்டி, அவரை 'தேவ ஆட்டுக்குட்டி' என்று யோவான் சொன்னாலும், பெரும்பாலானவர்கள் அதை, தவறாகப் புரிந்து கொண்டார்கள். அவர் எதைப்பற்றிப் பேசுகிறாரென அறியாமல் இருந்திருக்கலாம்.

எனவே, யோவான் தன் சுவிசேஷத்தின்மூலம், மேசியாகுறித்த அவர்களது புரிதலை மாற்றி, வரவிருந்த ராஜாபற்றியும் அவரது ஊழியம்பற்றியும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அவரில் நிறைவேறினதையும் அவர்கள் உணர்ந்துகொள்ள விரும்பினார். இயேசு ஓர் அரசியல் - இராணுவத் தலைவராக வராமல், உலகத்தின் பாவங்களுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும்படி வந்தார். அதுதான் அவரது நோக்கம். தொடர்ந்து சகலமும் நிறைவேறிய பிறகே இறுதி ராஜ்யம் வரும். தானி 7:18.

இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது அவரை, தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான் சுட்டிக்காட்டியபோது, மேசியாவின் பணிகுறித்த ஒரு புதிய வெளிச்சம் வீசப்பட்டது. 'அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போல இருந்தார்' எனும் ஏசாயாவின் வார்த்தைகள் அந்தத் தீர்க்கதரிசியின் மனதில் தோன்றின.

'நானும் இவரை அறியாதிருந்தேன்' என்று யோவான் ஸ்நானன் சொல்லுகிறார். யோவான் 1:31. அப்படியானால், யோவான் ஸ்நானன் எவ்வாறு இயேசுவே மேசியாவென அறிந்துகொண்டார்? எப்படியென்றால், யோவானை அனுப்பின கர்த்தர் ஏற்கனவே அவரிடம், 'ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்துவருகிறேன்'. யோவான் 1:33,34. அதாவது, இயேசுதாம் மேசியா என்பதை தேவனே யோவானுக்கு வெளிப்படுத்தினார்.

'கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்' 1கொரி 1:24. இயேசுதாம் கிறிஸ்து என்கிற அறிவு பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையின் உணர்த்துதலால் தேவனிடமிருந்துதாமே வருகிறது. இந்தக் கருத்து யோவானில் அடிக்கடி வருகிறது. இரட்சிப்பானது உலகத் தத்துவத்தால், அறிவியலால் அல்லது உயர் கல்வியால் வருவதில்லை. விசுவாசத்தால் தன்னை அர்ப்பணித்து, இயேசுவுக்குக் கீழ்ப்படிவதால், தேவனிடமிருந்துமட்டுமே கிடைக்கிறது.

---

**நமக்கு வெளிப்படுத்தப்படாத பட்சத்தில், இயேசு நம் பாவநிவாரண பலி என்கிற சத்தியத்தை நாம் எவ்வாறு அறிந்துகொள்ள முடியும்? அப்படியானால், வேதாகமத்தையும் இயேசுவைப்பற்றி அது போதிப்பதையும் அறிவது ஏன் முக்கியமானது?**

# ஏற்றுக்கொள்ளுதலும் புறக்கணித்தலும்

யோவான் 6இல் சொல்லப்படுகிற 5000 பேரைப் போஷித்த சம்பவம்பற்றி 2ம் பாடத்தில் படித்தோம்; ஆனால், அதன் இறுதிப் பகுதியை ஆராயவில்லை; அதை இந்தப் பாடத்தில் பார்ப்போம்.

**மக்கள் புரிந்துகொள்ளச் சிரமப்பட்ட என்ன விஷயத்தை இயேசு சொன்னார்? யோவான் 6:51-71.**

இயேசு அற்புதவிதமாக தங்களைப் போஷித்ததால், அவரை ராஜாவாக முடிசூட்ட மக்கள் ஆயத்தமாக இருந்தார்கள். யோவான் 6:1-15. பிறகு கப்பர்நகூம் ஜெபாலயத்தில் வைத்து, அந்த அற்புதத்தின் ஆவிக்குரிய அர்த்தம்பற்றிப் பேசும்போது, ‘ஜீவ அப்பம் நானே’ என்று இயேசு சொல்கிறார். யோவான் 6:35. தம் மாம்சமே அப்பம் என்றும், உலகத்தின் ஜீவனுக்காக அதைக் கொடுப்பதாகவும் இயேசு விளக்குகிறார். யோவான் 6:51.

இவ்வாறு சொன்னதால், இயேசு தங்கள் பூலோக அரசராக இருக்க விரும்பவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்கிறார்கள். பூலோகச் சிந்தனையின் அச்சுக்குள் சிக்க அவர் விரும்பவில்லை. இயேசு பேசுவதைத் தொடர்ந்து கேட்டால், அவரை மேசியாவாக உணர்ந்து, ஏற்றுக்கொள்ளும்படி தங்கள் சிந்தை மாறிவிடும் என்பதால், அதைக் கேட்க மறுக்கிறார்கள். அவருடைய சீடர்களில் அநேகர் அப்போது அவரை விட்டுச் சென்றுவிடுகிறார்கள். யோவான் 6:66.

மனிதரீதியாக இது இயேசுவுக்குக் கடினமாக இருந்திருக்கும். பிறர் தங்களை விரும்புவது யாருக்குத்தான் பிடிக்காது? ஆனால் அநேகர் பின்வாங்கி, ஒருவருடைய கொள்கையில் கேள்வி எழுப்புவது அதைரியத்தை ஏற்படுத்தும். அநேகர் தம்மைவிட்டுப் பின்வாங்கியதை இயேசு கண்டபோது, தமக்கு நெருக்கமானவர்களிடம், ‘நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா?’ என்று கேட்கிறார்.

அப்போதுதான் பேதுரு அற்புதமான ஓர் அறிக்கையைச் செய்கிறார்; ‘இயேசு யார்? அவரிடம் என்ன இருந்தது?’ என்பதற்கான மற்றொரு சாட்சியாக அது இருந்தது. ‘நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம்’ என்றான். யோவான் 6:68,69.

சீடர்கள் இரண்டு வருடங்கள் இயேசுவோடு இருந்திருந்தார்கள்; அவரோடு பயணம் செய்தார்கள்; அவரது அற்புதங்களைப் பார்த்தார்கள்; பிரசங்கங்களைக் கேட்டார்கள். அவருக்கு இணை யாருமில்லை என்பதை அனுபவத்திலிருந்து அறிந்திருந்தார்கள். சில சூழ்நிலைகள் விநோதமாக இருந்தாலும், அவர் வந்ததற்கான நோக்கத்தை அதிகம் புரியாமல் இருந்தாலும், அவர் மேசியா என்கிற நம்பிக்கை ஆழமாகப் பதிந்திருந்தது. இயேசு மரித்து, உயிர்த்தெழுந்த பிறகுதான் அவர் வந்ததற்கான காரணத்தை புரிந்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

---

**திரளானபேர் சேரும்போது பொதுவாகத் தவறான கருத்தே உருவாகிறது என்கிற உண்மையை இந்தச் சம்பவத்திலிருந்து எவ்வாறு அறியலாம்? நம் விசுவாசத்தின் அம்சங்கள் பெரும்பாலானவர்களால், ஏன் பெரும்பாலான கிறிஸ்தவர்களால்கூட ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதால் இதை நாம் ஞாபகத்தில் வைப்பது ஏன் முக்கியம்?**

# பிதாவின் சட்சி

வார்த்தையானது (லோகாஸ்) தேவனோடு இருந்ததாக, அதாவது தேவனாகிய பிதாவுடன் இருந்ததாகச் சொல்லி, யோவான் சுவிசேஷம் துவங்குகிறது. யோவான் 1:1. வார்த்தை மாம்சமாகி வந்த இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது இறங்கி, அவரைக்குறித்துச் சாட்சியிட்டார். யோவான் 1:32-34. ஆனால் இயேசுவின் பூலோக ஊழியத்தின்போது பிதாவும் இயேசுவைப்பற்றிச் சாட்சியிட்டார்.

**யோவான் 5:36–38இல், பிதாவைப்பற்றி இயேசு என்ன சொல்கிறார்?**

---

பிதா அனுப்பினதாலேயே தாம் எல்லாக் கிரியைகளையும் செய்ததாக இயேசு சொல்கிறார். பிதா தம்மை அனுப்பினார், தம்மைப்பற்றிச் சாட்சியும் கொடுக்கிறார் என்று தெளிவாகச் சொல்லுகிறார்.

**இயேசுவைப்பற்றி பிதா என்ன சொல்கிறார்? மத்தேயு 3:17; 17:5; மாற்கு 1:11; லூக்கா 3:22; 2பேதுரு 1:17,18.**

இயேசுவின் ஞானஸ்நானத்தின்போது, அந்த முக்கியமான தருணத்தை, பிதாவும் ஆவியானவரும் சேர்ந்து அடையாளம்காட்டினார்கள்; இயேசுவுடைய ஊழியத்தின் ஆரம்பமே அந்தத் தருணம். இயேசு தம் நேச குமாரன், அவரில் தாம் பிரியமாக இருப்பதாக பிதா சொல்லுகிறார். பிறகு, கிறிஸ்துவுடைய ஊழியத்தின் ஒரு முக்கியமான கட்டத்தில், பிதா மீண்டும் பேசுகிறார்; அது யோவான் சுவிசேஷத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஊழியத்தின் இறுதி நாட்களில் உச்சக்கட்ட நிகழ்வுகள் அரங்கேறிக் கொண்டிருந்தன. அவரைத் தடுக்க வழிதெரியாமல் இருந்த மததலைவர்கள் எப்போதையும்விட இப்போது அவரைக் கொல்ல ஆவலோடு இருந்தார்கள். யோவான் 12:19. திரளான மக்கள் அவரைப்பற்றி பரவசத்தில் இருந்தார்கள்; குறிப்பாக லாசருவை மரித்த நிலையிலிருந்து எழுப்பினதைக் கண்டவர்களின் சாட்சியைக் கேட்டு அதிகமானோர் அவரைப் பின்பற்ற ஆரம்பித்திருந்தார்கள். யோவான் 12:17,18. பண்டிக்கைக்காக அங்கே வந்திருந்த கிரேக்கர்கள்கூட இயேசுவைப் பார்க்க விரும்பினார்கள்.

இந்தக் கட்டத்தில் இயேசு, ‘பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்’ என்று சொன்னபோது, பரலோகத்திலிருந்து பிதா மீண்டும், ‘மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன்’ என்று சொல்கிறார். யோவான் 12:28.

இயேசுவுடைய மகிமையின் வேளை சிலுவைதான் என்று ஏற்கனவே பார்த்தோம். எனவே, இயேசுவைப்பற்றின பிதாவின் சாட்சியானது உலகத்தின் பாவங்களுக்காக தேவ ஆட்டுக்குட்டி அடிக்கப்படவிருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. அதுவே அவரது பூலோ ஊழியத்தின் இறுதி நிகழ்வாக இருந்தது. நம் பாவங்களுக்கான தண்டனை முழுவதையும் ஏற்று, அவர் மரித்துவிட்டார்; அவர்மேலுள்ள விசுவாசத்தால், அந்தத் தண்டனையை நாம் சந்திக்க வேண்டியதில்லை.

# கூட்டத்தாரின் சாட்சி

பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு, 'ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்' என்றார். யோவான் 7:37,38.

தாம் யார், தாம் வந்த நோக்கமென்ன என்பதை இயேசு தைரியமாகச் சொன்னதாக யோவான் சுவிசேஷத்தின் பல இடங்களில் பார்க்கிறோம்.

தாம் யார், தம்மிடம் வருகிற யாவருக்கும் தாம் என்ன செய்யமுடியும் என்பதுபற்றி இயேசு சொன்னதற்கான ஓர் உதாரணம்தாம் மேலுள்ள வசனங்கள். யோவான் 7:37,38. இவை ஆச்சரியமான அறிக்கைகளும்கூட.

**கூடாரப்பண்டிகைக்காக வந்திருந்த யூதர்களிடம் இயேசு பேசியபோது, கூட்டத்திலிருந்த பலருடைய எதிர்வினை எப்படி இருந்தது? யோவான் 7:37-53.**

அவர் வெகுகாலத்திற்குமுன் முன்னுரைக்கப்பட்ட மோசேயைப் போன்ற தீர்க்கதரிசி என்று சிலர் சொன்னார்கள். உபா 18:15-19. மற்றவர்கள் இயேசுவே கிறிஸ்து என்று பார்த்தார்கள். ஆனாலும் இதினிமித்தம், மேசியா கலிலேயாவிலிருந்து வரமாட்டார், அவர் தாவீதின் வம்சத்திலிருந்து வரவேண்டும், அவர் பெத்லகேமில் பிறக்கவேண்டும் என்பதுபோன்ற வாக்குவாதம் உண்டாயிற்று; இவை எல்லாமே இயேசுவைப்பற்றின உண்மைகள்தாம். ஒப்பிடவும் மத்தேயு 1-2. ஆனால் பலர் இதை அறியாததுபோல் இருந்தது.

அவரைக் கைதுசெய்யச் சென்ற அதிகாரிகள்கூட அவரது அற்புதமான வார்த்தைகளைக் கேட்டு அவரைக் கைதுசெய்ய மறுத்தார்கள். உடனே பரிசேயர்கள் அந்த அதிகாரிகளிடம் இவ்வாறு கேட்டார்கள்: 'அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை விசுவாசித்ததுண்டா?' யோவான் 7:48. இந்தக் கேள்வியினிமித்தம் யோவான் மீண்டும் நிக்கொதேமுவைச் சுட்டிக்காட்டுகிறார்; இவர், இயேசுவைச் சந்தித்தபிறகு, அவர்களுடைய சதித்திட்டங்களிலிருந்து இயேசுவைக் காப்பாற்ற முயலுகிறார். 'ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு, அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்பிரமாணம் சொல்லுகிறதா?' என்று கேட்டார். யோவான் 7:51.

நிக்கொதேமு எப்போதாவது இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டாரா? இந்தக் காட்சியில் அது உறுதியாகவில்லை என்றாலும், இந்த நிகழ்வுக்கும் இயேசு மரித்த பிறகு அவர் செயல்பட்டதற்கும் இடையே அவர் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். யோவான் 19:39,40. நிக்கொதேமு விசுவாசியாக மாறினதற்கான வலுவான ஆதாரத்தை வேதாகமம் கொடுக்கிறது.

எனவே, பரிசேயர்களில் ஒருவர் அவரை விசுவாசித்தார் என்பதே அவர்களது கேள்விக்கான பதில்.

---

**இயேசுவைப் பின்பற்றின கூட்டத்தாரை, தலைவர்கள் ஏளனமாகக் கருதினதின் நிமித்தம் என்ன சொன்னார்கள்? யோவான் 7:49. அதில் நமக்கு என்ன பாடம் உள்ளது?**

# மேலும் படிக்க:

' "யாரிடத்தில் போவோம்?" இஸ்ரவேலின் போதகர்கள் சம்பிரதாயத்திற்கு அடிமைகளாக இருந்தார்கள். பரிசேயர்களும் சதுசேயர்களும் எப்போதும் மோதிக்கொண்டிருந்தார்கள். இயேசுவைவிட்டுவிலகினால், சடங்குகளைமட்டும்பிடித்துத்தொங்குபவர்களோடும், தங்கள் மகிமையைமட்டுமே லட்சியமாகக் கொண்டவர்களோடும் சேர்ந்ததாகிவிடும். சீடர்கள் முன்பு வாழ்ந்த வாழ்க்கைக்குப் பதிலாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் அதிக சமாதானத்தையும்சந்தோஷத்தையும்பெற்றுக்கொண்டார்கள். பாவிகளின் நண்பனைப்பரியாசம் பண்ணி, உபத்திரவப்படுத்தினவர்களிடம் அவர்கள் எவ்வாறு திரும்பிச் செல்லமுடியும்? அவர்கள் வெகுகாலம் மேசியாவுக்காக எதிர்பார்த்திருந்தார்கள்; இப்போது வந்திருந்தார்; அவரை விட்டுவிட்டு அவரது உயிரை எடுக்கத் தேடினவர்களிடம் செல்லமுடியாது; அவரது சீடர்களாக மாறினதால் தங்களை உபத்திரவப்படுத்தினவர்களிடம் செல்லமுடியாது.

' "யாரிடத்தில் போவோம்?" கிறிஸ்துவின் போதனையையும், அன்பு–இரக்கம் குறித்த அவரது போதனையையும் விட்டுவிட்டு, அவநம்பிக்கை எனும் அந்தகாரத்திற்கும், உலகத்தின் துன்மார்க்கத்திற்கும் திரும்பிச்செல்ல முடியாது. இரட்சகரின் அற்புதமான கிரியைகளைக் கண்டிருந்த பலர் அவரை விட்டுப் பின்வாங்கியிருந்தாலும், 'நீர் கிறிஸ்து' என்று சீடர்களுடைய விசுவாசத்தை, பேதுரு வெளிப்படுத்தினார். தங்களுடைய ஆத்துமாக்களின் நங்கூரமானவரை இழக்கிற எண்ணமே அவர்களைப் பயத்தாலும் வேதனையாலும் நிறைத்தது. இரட்சகர் இல்லாமல் போவது இருளான, புயல்மிகுந்த ஒரு கடலில் அடிக்கப்பட்டுச் செல்வது போன்றது '.[1]

[1] Ellen G. White, The Desire of Ages, p. 393.

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *இயேசுவே மேசியா என்பதற்கும், கிறிஸ்தவ மார்க்கத்தின் சத்தியத்திற்கும் ஆதாரம் கொடுக்கப்பட்டபோது, சிலர் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டார்கள், வேறு சிலர் அதைப் புறக்கணித்தார்கள்; அதற்கான காரணத்தை வகுப்பில் கலந்தாலோசியுங்கள்.*

2. *இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார் என்பதைவிட முக்கியமான சத்தியம் வேறு எதுவாக இருக்கமுடியும்? ஆனாலும், இந்த முக்கிய உண்மையை எவ்வாறு அறிந்து கொள்கிறோம்? அறிவியல், இயற்கை விதி, இயற்கை இறையியல், பகுத்தறிவு, வழக்காடுதல் போன்றவற்றலா? இவை எல்லாமே ஒரு சிருஷ்டிகர்மீது, ஆதி காரணர்மீது, பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் அரசாளுபவர்மீது நம்பிக்கை வைக்க நம்மை வழிநடத்தியிருக்கலாம்; ஆனாலும், இவை அனைத்தும் சேர்ந்தோ, தனித்தோ, நாம் அறிந்திருக்கவேண்டிய முக்கிய உண்மையை நமக்குப் போதிக்க முடியாது. கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்தார் என்பதே அந்த முக்கிய உண்மை. நாம் உண்மையில் அறியவேண்டிய ஒன்றை கொள்கையளவில்கூட இவை அறிந்து கொள்ளச் செய்யமுடியாது. வேதாகமத்தை மட்டுமே நம் இறுதி அதிகாரமாக்கவேண்டியதின் அவசியத்தை இந்த உண்மை எவ்வாறு உணர்த்துகிறது?*

3. *தேவன் தங்கள் வாழ்க்கையில் செய்திருப்பதை எண்ணிப்பார்ப்பது எவ்வாறு ஒருவருடைய விசுவாசத்தில் முக்கியமானதாக இருக்கிறது?*

# ‘நாங்கள் யாரையும் அனுப்பவில்லை’

**ஆண்ட்ரூ மெக்செஸ்னீ**

கொலம்பியாவில் உள்ள ஒரு சிறைச்சாலையில் ஊழியம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார் டொனால்டோ வெலாஸ்குவெஷ். நான்கு வருடங்களாக வெள்ளிக்கிழமை தோறும் அங்கு செல்லுவார். ஒரு வெள்ளிக்கிழமையில் அவரால் செல்லமுடியவில்லை. தச்சராக வேலைப் பார்த்ததால், நண்பர் ஒருவருக்கு அவசரமாக ஒரு உதவிசெய்ய வேண்டியிருந்தது. அதுபோக, அந்த வேலையின் மூலம் கிடைக்கிற பணமும் தேவையாக இருந்தது.

டொனால்டோ, இரண்டு செவந்த்–டே சபை உறுப்பினர்கள், அவர்களது போதகர் ஆகிய நான்கு பேருக்குத்தான் அகாசியாஸிலிருந்த அந்தச் சிறைச்சாலையைச் சந்திப்பதற்கு அனுமதியுண்டு; எனவே அவர்களை அன்று சிறைச்சாலைக்குச் செல்லும்படி கூறினார். “இல்லை, எனக்கும் வேலை இருக்கிறது” என்று ரேன்ஸெஸ் என்பவர் சொன்னார். பெட்ரோ என்பவராலும் செல்லமுடியவில்லை. போதகரும், தான் ஊரில் இல்லையெனச் சொல்லிவிட்டார். டொனால்டோ அழுதார், ஜெபித்தார். அவரது மனைவி ஜெசுஸிடா காரணம் கேட்டபோது, சிறைச்சாலையில் இருப்பவர்களைச் சந்திக்காமல் இருக்கமுடியாது என்றும், ஆனால் வேலையையும் அவசரமாக முடிக்கவேண்டும் என்றும் சொன்னார். “வேலையைப் பாருங்கள், மற்றதை தேவன் பார்த்துக்கொள்வார்” என்று ஜெசுஸிடா சொன்னார்.

அடுத்தமுறை டொனால்டோ சிறைச்சாலைக்குச் சென்றபோது, 38 சிறைக்கைதிகள் அவரது பிரசங்கத்தைக் கேட்க கூடினார்கள். அப்போது பெட்ரோ என்கிற சபை உறுப்பினரும் கூடச் சென்றிருந்தார்.

“கடந்தமுறை வந்தவர் வரவில்லையா?” என்று ஒரு சிறைக்கைதி கேட்டார். “நாங்கள் யாரையும் அனுப்பவில்லையே” என்று டொனால்டோ சொன்னார். “இல்லையே, ஒருவர் வந்து பிரசங்கம்பண்ணினாரே” என்று இன்னொரு சிறைக்கைதி கூறினார். “இல்லை, நாங்கள் யாரையும் அனுப்பவில்லை, அவர் வேறு ஏதாவது சபையைச் சேர்ந்தவராக இருக்கலாம்” என்று டொனால்டோ சொன்னார். “இல்லை, இல்லை, இங்கு வந்து பேச அனுமதி பெற்றுள்ள அனைவரையும் எங்களுக்குத் தெரியும். அன்று வந்தவர் புதியவராக இருந்தார், அவர் வேறு சபையைச் சேர்ந்தவரும் அல்ல” என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். அவர் ஏழாம் நாள் ஓய்வுநாளைப் பற்றி பேசினதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

அவர் உயரமாக, வெள்ளை நிற சட்டை அணிந்து, மிகச்சீராக இருந்தாகவும், வேதாகமத்தை மிகநன்றாக அறிந்திருந்ததாகவும் சொன்னார்கள். டொனால்டாவின் கையைப் பிடித்து அழுத்திய பெட்ரோ, “ஒரு தூதன்தான் வந்திருக்கவேண்டும்” என்று சொன்னார்.

ஆனாலும் டொனால்டோவால் நம்பமுடியவில்லை. சிறைக்குள் வருபவர்கள்குறித்த பதிவை சிறைக்காவலரிடம் கேட்டார். அந்த அதிகாரி, கணினியில் பார்த்துவிட்டு, அப்படி யாரும் அன்று வரவில்லையெனக் கூறினார்.



“எனக்குப்பதிலாக ஒரு தூதன்தான் இங்கு வந்து போதித்திருக்கிறார்” என்று ஆச்சரியத்தோடு டொனால்டோ சொன்னார்.

ஆறு வருடங்கள் கடந்தன; அந்தச் சிறைக்கைதிகள் 38 பேருமே இயேசுவை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றார்கள்.